**மாவத்தகம பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 22 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மாவத்தகம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) எழுச்சிக் கிராமங்கள் சபை வீதிகள் கொங்கிரீட் இடும்செயற்திட்டத்திற்குரிய ரூபா 50,000 ஆன நிறுத்திவைத்தல் தொகை கொடுப்பனவு செய்யும் போது கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் களஞ்சிய வழங்கல் ரூபா 689,104 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான இறுதி மீதிகளின் கீழ் 06 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அட்டவணையின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 27,372,555 ஆன இணக்கமின்மைகள் காணப்பட்டன.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 112,908,991 ஆன பெறவேண்டிய கணக்கு மீதிகளில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்த 29,618,521 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 40,018,159 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 4,810,167 தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான சான்றுகள் காணப்படாமை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா. 110,341,695 பெறுமதியான 15 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் மெய்மையாய்வு செய்ய முடியாமல் போயிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| | நி.பி 570 மற்றும் 571 | 143,203 | காலாவதியான 59 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4.3 (ஈ) - பந்தி | 311,253 | வழங்கக்கூடிய காலம் முடிவடைந்திருந்த பெறுகை தீர்மானங்களின் கூறுவிலை அடிப்படையில் மீளாய்வாண்டில் 11 சந்தர்ப்பங்களில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (இ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| | 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | சபைக்குரிய வாகனங்களில் அரசின் இலட்சிணை பொறிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய வ.மா.உ.தி/01/12/01/34 ஆம் இலக்க உள்ளூராட்சி மனற் ஆணையாளரின் சுற்றறிக்கை | 55,670 | சபையின் செயலாளரினால் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பட்டு சபைக்குரிய கெப் வண்டியொன்று 5,197 கி.மீ. ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |

**1.3.6 போதியளவு அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தேவையான அங்கீகாரம் இன்றி 6 நாட்குறிப்பேடுகளில் ரூபா 65,850 பெறுமதியான வாசிகசாலை வைப்பு மற்றும் ரூபா 5,203,293 பெறுமதியான கடன்பட்டோர் தொகை என்பன திரண்ட நிதியத்திற்கு

(ஆ) வைப்பு மீதிகளை சீராக்குவதற்காக திரண்ட நிதியத்திற்கு ரூபா 205,336 வரவு மற்றும் ரூபா 849,747 செலவு வைப்பதற்கு உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 29,726,634 ஆக இருந்ததுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 18,304,262 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | வீதவரி மற்றும் வரி | 4,760 | 5,090 | 3,936 | 4,414 | 3,234 | 2,069 | 1,860 | 4,666 |
| ii | வாடகை | 8,565 | 7,458 | 7,286 | 2,638 | 7,930 | 7,302 | 4,364 | 2,466 |
| iii | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 802 | 281 | 281 | 70 | 1,204 | 1,047 | 1,048 | 70 |
| iv | ஏனைய வருமானம் | 115,616 | 105,043 | 82,936 | 77,195 | 120,663 | 96,527 | 76,372 | 49,613 |
| | மொத்தம் | 129,743 | 117,872 | 94,439 | 84,317 | 133,031 | 106,945 | 83,644 | 56,815 |

**குறிப்பு**

மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் முன்னைய ஆண்டுகளுக்குரிய அறவீடுகள் ரூபா 26 மில்லியனாக இருந்தது.

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்குரிய பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் முன்னைய ஆண்டுகளின் நிலுவை வருமானமான ரூபா 174 மில்லியனில் ரூபா 94 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 57 மில்லியனான நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 84 மில்லியனாக இருந்தது.

**2.2.3 வீத வரி**

ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 4,665,952 தொகையான நிலுவையில் ஆண்டில் 13 சதவீதமான ரூபா 653,000 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. சபையின் நிலுவை வருமான அறவீட்டின் செயன்முன்னேற்றம் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.

**2.2.4 வாடகை**

ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 2,466,000 தொகையான நிலுவையில் ஆண்டில் 40 சதவீதமான ரூபா 984,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த ரூபா 1,082,046 தொகை சினிமா திரையரங்கிலிருந்து கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 14 விடயங்கள் தொடர்பாக மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட்டிருந்த செயறபாடுகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிறைவேற்றப்படாத பணிகள்**

மீளாய்வாண்டில் ரூபா 2,000,000 ஆன பாதிடப்பட்ட 04 நிர்மாணங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

i சேகரிக்கப்படும் கழிவுகளில் 60 சதவீதம் அளவிலான உக்கும் கழிவுகளில் கொம்போஸ்ட் பசளை உற்பத்தி செய்யப்பட்டு எஞ்சிய உக்காத கழிவுகள் அரச காணியொன்றில் முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்தது.

ii. மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட 720 தொன் கழிவுப்பொருட்களில் இருந்து 08 தொன சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்தன.

**(உ) சுற்றாடல் சிக்கல்கள்**

மாடு கொல்லுமிடத்தின் கழிவுப்பொருட்களை முறையாக வெளிப்படுத்தாமை காரணமாக பொது மக்களின் சுகாதாரத்திற்கு உட்பட சுற்றாடல் மாசடையக்கூடியதாகவும் இருந்தது.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

"நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030" தொடர்பாக விரிவான அறிவொன்று இல்லாதிருந்த போதும் வறுமையை ஒழித்தலை நோக்காகக் கொண்டு சுயதொழிலுக்காக தேவையான இடவசதிகளை விரிவுபடுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தப்பட்டிருந்தன. தேவையான இயந்திரங்கள் மற்றும் நிதி இயலளவுகள் இல்லாமை மற்றும் அறியாத்தன்மை போன்ற காரணங்களின் அடிப்படையில் நிலைபேறான அபவிருத்தி இலக்களை அடைவதற்கு தேவையான வளங்கள் மற்றும் இயலளவு தொடர்ச்சியாக வழங்குவதற்கு முடியாமல் இருந்தது.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டிருந்த 20 தொலைத்தொடர்பு கோபுரங்களில் இருந்து ரூபா 400,000 ஆன செய்முறைக் கட்டணங்கள் அறவிடுவதற்கும் இணக்கச் சான்றிதழைப் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் நாளாந்த செயற்பாடுகளுக்காக தேவையான வெவ்வேறு பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

03 நூலகர் பதவிகள் வருடக் கணக்காக வெற்றிடங்களாக காணப்பட்டன.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான கெப் வண்டியொன்று, நலனாலிகளுக்கு வழங்கப்பட வேண்டிய 02 நடாமடும் விற்பனை கூடங்கள் மற்றும் சபைக்கு உரித்தில்லாத பிணியாளர் வண்டி என்பன வருடக் கணக்காக சபை வளவில் விளைவற்ற வகையில் காணப்பட்டது.

**3.4.2 வெளிப்படையான மோசடிகள்**

மாவத்தகம நகரின் மத்தியில் வீதியின் ஓரப்பகுதியில் எவரேனும் நபரொருவரினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கு முரணாக வியாபார நிலையமொன்று நிர்மாணித்து காணப்பட்டது. இது தொடர்பாக சபை சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 பெறுகை**

**3.5.1 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 5,243,376 ஆல் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த உட இங்குருவத்த முதல் பள்ளே இங்குருவத்த வீதி, கல்வல வீதி, ஆகாவ பிரதான வீதி, சாமோதய வீட்டு

குறுக்கு வீதி II ஆவது மாவத்தை, மாவத்தகம சமகி உயன வீதி மற்றும் டெனகர்வத்த வீதி போன்ற வீதிகள் நியமத்திற்கு கொங்கரீட் இடாமை காரணமாக வீதியில் மேல் பகுதியில் கற்கள் மற்றும் மணல் தோன்றி வீதி பழுதடைந்து காணப்பட்டது.

(ஆ) மாவத்தகம சந்தை வீதி ரூபா 1,129,489 ஆல் அபிவிருத்தி செய்யம் நிர்மாணத்தின் 20 அடி அளவில் நீளமான 03 இடங்களில் கொங்கிரீட்டின் ஓரம் சேதமடைந்திருந்தமையால் வீதியில் பரப்பியிருந்த அச்சுக்கல் சேதமடைந்திருந்ததாக 2017 ஒக்தோபர் 30 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்படாத 05 நிர்மாணங்களுக்கு ரூபா 2,172,545 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அறிக்கைளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்காமை. |
| (இ) பெறுகை செயற்பாடு | | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் கொள்வனவு செய்யப்படாமை. |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | | பாதீடு செய்யப்படாமல் செலவினங்களை மேற்கொள்ளல். |